

# சக்தி பைனான்ஸ் லிமிட்டெட்

*2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான செயல்முறை பலன்கள் குறித்து நிறுவனத்தின் தலைவர்* **டாக்டர் ம. மாணிக்கம்** *அவர்கள் ஆற்றிய உரை*

*அன்பார்ந்த பங்குதாரர்களே,*

*நமது நிறுவனத்தின் 59ஆம் ஆண்டு பொதுப்பேரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்திருக்கும் உங்கள் அனைவரையும் வரவேற்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். சென்ற 31 மார்ச் 2016ம் தேதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளும், இயக்குநர்கள் குழுவின் அறிக்கையும் ஏற்கனவே அனுப்பப்பட்டு தற்போது உங்களிடம் இருப்பதால், உங்கள் அனுமதியுடன் அவற்றை வாசிக்கப்பட்டதாக எடுத்துக் கொள்கிறேன்.*

**பொருளாதாரச் சூழல்**

*இந்த ஆண்டில் பரந்த உலகப் பொருளாதாரம் மற்றும் அரசியல் நிலவரம் கொந்தளிப்புடன் காணப்பட்டது. இதனால் உலகப் பொருளாதார வளர்ச்சி 2014ல் இருந்த 3.4 சதவிகிதத்திலிருந்து 2015ஆம் ஆண்டில் 3.1 சதவிகிதமாக குறைந்துள்ளது. உலகளாவிய வளர்ச்சி 3.2 சதவிகிதமாக 2016ல் இருக்கும் என்று சர்வதேச நாணய நிதியத்தால் (ஐஎம்எப்) கணிக்கப்பட்டுள்ளது. இவ்வளர்ச்சி 2017ல் 3.5 சதவிகிதத்தை எட்டுவதற்கான வாய்ப்புள்ளது. புதிய மற்றும் வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதாரம் உலக வளர்ச்சிக்கு ஒரு முக்கியமான பங்கை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

*இந்தியாவின் நட்சத்திரப் பொருளாதார செயல் திறன் வளர்ச்சியாகிய 7.6 சதவிகிதம் உலகப் பொருளாதாரத்தின் மெத்தனமான வளர்ச்சியை மிஞ்சி நிற்கிறது. இந்தியா பெருமளவிலான பொருளாதார ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துவதில் அடைந்த ஆதாயத்தை தொடர்ந்து பலப்படுத்தி வருகிறது. இந்தியாவின் வளர்ச்சி பெருமளவில் தொழில் துறையின் துரித வளர்ச்சி மற்றும் சேவைத்துறையின் உயர்ந்த பட்ச வளர்ச்சியைச் சார்ந்ததாகும். விவசாய உற்பத்தி முந்தைய ஆண்டின் குறைந்த அளவை விட சொற்பமான அளவு, அதாவது 1.2 சதவிகிதம் வளர்ச்சியடைந்துள்ளது.*

*ஏப்ரல்-ஜுன் 2016 காலாண்டில், மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.1 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. எனினும் நிதி அமைச்சகம், நல்ல பருவ மழை மற்றும் ஏழாவது சம்பளக் கமிஷனின் பலன்கள் போன்றவற்றின் பயனாக நடப்பாண்டில், 8 சதவிகித வளர்ச்சியை நம்பிக்கையுடன் எதிர்நோக்குகிறது.*

**விவசாயத் துறை**

*252.23 மில்லியன் டன்கள் உணவு தானியங்களை உற்பத்தி செய்ய 2015-16ஆம் ஆண்டில் இந்தியா முனைந்துள்ளது. இது மத்திய அரசு நிர்ணயித்த இலக்கை விட 4.5 சதவிகிதம் குறைவு. இருப்பினும், அபரிமிதமான மழையின் பொருட்டு உணவு தானிய உற்பத்தியை 270.10 மில்லியன் டன்களாக உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது.*

*வேளாண்மை வளர்ச்சி 6 சதவிகிதமாக இருக்கும் என்று மத்திய அரசு கணித்துள்ளது. வேளாண்மை வளர்ச்சியால் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி ஒரு சதவிகிதம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. பரவலான மழை காரணமாக முக்கிய குறுவை பயிர்களான நெல், பருப்பு வகைகள் மற்றும் எண்ணை வித்துக்கள் நடவு நன்கு கூடியிருப்பதால், சிறப்பான அறுவடை கிடைக்க வாய்ப்புகள் உயர்ந்துள்ளது. இதனால், உணவின் பொருட்டு ஏற்படும் பணவீக்கம் தளர்ந்து, பண்ணை வருமானம் உயர்ந்து, பொதுமக்களின் நுகர்வு அதிகரித்து, ஒட்டுமொத்த ஒரு நல்ல பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

**தொழில் துறை**

*தொழில் உற்பத்தி குறியீட்டு எண், மின்சாரம் மற்றும் சுரங்கத்துறையின் ஆரோக்கியமான வளர்ச்சியால் 2.1 சதவிகிதம் உயர்ந்துள்ளது. உற்பத்தித் துறை 0.9 சதவிகிதம் மட்டுமே வளர்ந்துள்ளது.*

*நுகர்வோர் விலை குறியீட்டு எண் அடிப்படையிலான பணவீக்கம் உணவுப் பொருட்களின் விலை ஏற்றத்தால் ஜுலை 2016ல் ஒரு மாதத்திற்கு முன்பு இருந்த 5.77 சதவிகிதத்திலிருந்து 6.07 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.*

**வாகனத் தொழில் துறை**

*வாகனத்துறையின் செயல்பாடுகள், நம்மைப்போன்ற வங்கிசாரா நிதி நிறுவனங்களின் செயல்பாட்டிலும், இலாபம் ஈட்டுவதிலும் ஒரு நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும். வாகனத்துறை 2015-16ல் ஒரு பாங்கான வளர்ச்சி பெற்றாலும் அதன் சில பிரிவுகளின் வளர்ச்சி குன்றி காணப்பட்டது. சென்ற 2014-15ல் 0.28 சதவிகிதம் எதிர்மறை வளர்ச்சியாக இருந்த சரக்கு வாகனங்களின் உற்பத்தி தற்போது 2015-16ல் 12.10 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. நடுத்தர மற்றும் கனரக சரக்கு வாகனங்களின் உற்பத்தி கடந்த ஆண்டின் 2.69 லட்சங்களின் எண்ணிக்கையிலிருந்து நடப்பாண்டில் 3.41 லட்சங்களாக உயர்ந்து, 27.04 சதவிகித வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. இலகு ரக சரக்கு வாகனங்களின் உற்பத்தி 4.30 லட்சங்களிலிருந்து 4.42 லட்சங்களாக அதிகரித்து, 2.77 சதவிகித வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.*

*2014-15ல் 8.40 சதவிகித எதிர்மறை வளர்ச்சியிலிருந்த சரக்கு வாகனங்களின் மொத்த விற்பனை 2015-16ல் 11.51 சதவிகித வளர்ச்சியை பதிவு செய்தது. ஒட்டு மொத்த சரக்கு வாகனங்களின் பிரிவு கடந்த ஆண்டின் (ஏப்ரல்-ஜுலை 2015 வரையிலான*

*நான்கு மாதங்களில்) இதே காலகட்டத்தின் அளவை விட 9.65 சதவிகிதம் உயர்ந்துள்ளது. இது போலவே ஏப்ரல் - ஜூலை 2016 வரையிலான நான்கு மாதங்களில் நடுத்தர மற்றும் கனரக சரக்கு வாகனங்களின் வளர்ச்சி 8.51 சதவிகிதமாகவும், இலகுரக சரக்கு வாகனங்களின் வளர்ச்சி 10.50 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளன.*

**நமது நிறுவனத்தின் செயல்பாடுகளும் முடிவுகளும்**

*உங்கள் நிறுவன செயல்பாட்டின் முடிவுகள், தொடர்ந்து சிறப்பாக இருந்து கொண்டிருக்கின்றன என்பதை நான் உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற நிதியாண்டில் ₹ 502.66 கோடிகளாக இருந்த தவணைக் கொள்முதல் பட்டுவாடா, 2015-16ல்* ₹ **525.62** *கோடிகளாக உயர்ந்துள்ளது. மொத்த வருமானம் முந்தைய ஆண்டின் ₹ 150.62 கோடிகளிலிருந்து ₹* **172.07** *கோடிகளாக உயர்ந்துள்ளது. தவணைக் கொள்முதல் வருமானமும் முந்தைய ஆண்டின் ₹ 139.39 கோடிகளிலிருந்து ₹* **160.30** *கோடிகளாக உயர்ந்துள்ளது. 2015-16ம் ஆண்டில் தேய்மான ஒதுக்கீட்டிற்கு முந்தைய லாபம், சென்ற ஆண்டின் ₹ 23.70 கோடிகளிலிருந்து, ₹* **27.57** *கோடிகளாக உயர்ந்துள்ளது.*

*நடப்பு நிதியாண்டில் தேய்மானம், செலவின் நிதிக்குவை மற்றும் இதர கழிவுகளுக்கு பிந்தைய வருமான வரிக்கு முந்தைய லாபம் ₹* **24.72** *கோடிகளாகும். சென்ற ஆண்டு 2014-15ல் இது ₹ 21.29 கோடிகளாகும், கடந்த ஆண்டில் வரிக்குப் பிந்தைய ₹ 15.85 கோடிகளாக இருந்த லாபம், ₹* **4.32** *கோடிகள் அசாதாரண செலவின் காரணமாக, இந்த ஆண்டு ₹* **12.53** *கோடிகளாக குறைந்துள்ளது.*

*முன்னுரிமை பங்குகளுக்கான இடைக்கால மற்றும் விகிதாச்சாரப்படி கொடுக்கப்படும் ஈவுத் தொகைக்கு பின்பும், சாதாரணப் பங்குகளின் ஈவுத்தொகை 10 சதவிகிதமாக இந்த ஆண்டும் பராமரிக்கப்படுகிறது. லாப நஷ்ட ஆவணத்தில், தொடக்கத்தில் உள்ள உபரித்தொகையான ₹ 21.12 கோடிகளுக்கு பதிலாக இருப்புத் தொகை கம்பெனிகள் சட்டம் 2013ன் படி, கடன் பத்திர மீட்புக்காக ₹* **9.60** *கோடிகள் ஒதுக்கப்பட்டதன் பொருட்டு ₹* **14.73** *கோடிகளாக குறைந்துள்ளது.*

**மாறுதலுக்கு உட்படாத, ஈடுள்ள, மீட்கப்படக்கூடிய கடன் பத்திர பொது வெளியீடு**

*இந்த வருடம் 2016ல் ஏப்ரல் - மே மாதங்களில் நமது நிறுவனம் ₹ 1,000 முகமதிப்பில் ஈடுள்ள, மீட்கப்படக்கூடிய, மாறுதலுக்கு உட்படாத கடன் பத்திரங்களை ₹ 100 கோடிகளுக்கு (கூடுதலாக கிடைக்கக் கூடிய ₹ 100 கோடிகளைச் சேர்த்து ₹ 200 கோடிகள் வரை ஏற்றுக் கொள்ளக் கூடிய வரம்பில்) இரண்டாவது பொது வெளியீடாக வழங்கிய கடன் பத்திரங்களின் மூலம் ₹ 164.87 கோடிகளை திரட்டியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 16,48,708 கடன் பத்திரங்கள் தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு 18 மே 2016 அன்று வழங்கப்பட்டுள்ளது. இந்த கடன் பத்திரங்கள் மும்பை பங்குச் சந்தையில் ஏற்றுக் கொள்ளப்பட்டு 23 மே 2016 அன்று பட்டியலிடப்பட்டது. இதில் பெறப்பட்ட தொகை முழுவதும் கம்பெனியின் வணிக நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும்.*

**கம்பெனியின் 2016-17-ம் ஆண்டிற்கான வாய்ப்புகள்**

*நடப்பு நிதியாண்டிலும் கடன் பத்திரங்களை வெளியிட்டும், வங்கிகளில் நிதிஉதவிகள் பெற்றும், இதர வழிகளிலும் நிறுவனத்தின் நிதி ஆதாரத்தை மேம்படுத்த திட்டமிட்டிருப்பதால், கம்பெனி மேலும் முன்னேற வாய்ப்புள்ளது. இந்த பின்னணி நடப்பு வருடத்தில், உங்கள் கம்பெனி அதிக அளவில் பணப்பட்டுவாடா செய்யவும் கூடுதல் லாபம் ஈட்டவும் வழி வகுக்கும்.*

**நமது அரசின் சாதகமான வளர்ச்சிக்கான நடவடிக்கைகள்**

*மத்திய அரசின் லட்சியங்களுடன் கூடிய முயற்சிகளான மேக் இன் இந்தியா, ஸ்டார்டப் இந்தியா, டிஜிட்டல் இந்தியா, ஸ்கில் இந்தியா, மற்றும் நிதி இலக்கை அடைய வலுப்பெற்றிருக்கும் அர்ப்பணிப்பும், உள்கட்டமைப்புகள் ஏற்படுத்துவதில் கவனம் செலுத்துதல் ஆகியவையும், முதலீடுகளின் வாய்ப்பை பிரகாசிக்க வைக்கும். சுலபமாக தொழில் செய்வதை மேம்படுத்தும் பொருட்டு, நமது அரசு எடுத்துவரும் தொடர் நடவடிக்கைகள் அந்நிய நேரடி முதலீடு கணிசமான அளவுக்கு அதிகரிக்க உதவியுள்ளது. சரக்கு மற்றும் சேவை வரிகள் (ஜிஎஸ்டி) அமலாகும் பட்சத்தில் வாகனத் துறையில் வரிவிதிப்பு அளவு குறைந்து அதன் மூலம் பல நன்மைகள் வங்கி சாரா நிதி நிறுவனங்களுக்கு கிடைக்கும் என்று நம்புகிறோம்.*

*சிறந்த பொருளாதாரக் கொள்கைகளாலும், நல்ல பருவ மழையாலும், மற்றும் ஏழாவது சம்பளக் கமிஷனின் பரிந்துரைகள் செயல்பாட்டிற்கு வர இருப்பதாலும், நடப்பாண்டில் வாகனத்துறை 6-8 சதவிகித வளர்ச்சி பெறும் என்று இந்திய மோட்டார் வாகன உற்பத்தியாளர்கள் சங்கம் (சியாம்) எதிர் நோக்குகிறது.*

**நன்றி பாராட்டுதல்**

*பங்குதாரர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும், வைப்பு நிதி அளித்து உதவி வருபவர்களுக்கும், நிதி உதவி அளித்துவரும் வங்கி மற்றும் இதர நிதி நிறுவனங்களுக்கும், தர மதிப்பீடு செய்துவரும் நிறுவனத்திற்கும், நமது நிறுவனத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் இயக்குநர்கள் சார்பாக எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.*

*அன்னை சக்தி தேவி நமக்கு நல்வழிகாட்டி, நமது எல்லா முயற்சிகளும் வெற்றிபெற அருள் மழை பொழிய வேண்டுகிறேன்.*

*நன்றி, வணக்கம்.*

*24 செப்டம்பர் 2016*
*கோயம்புத்தூர்*

*டாக்டர் ம. மாணிக்கம்*
*தலைவர்*



# SAKTHI FINANCE

AN EDIFICE BUILT ON TRUST

*Statement of Chairman **Dr. M. MANICKAM***
*on the Company's performance for*
*the year ended 31st March 2016*

Dear Shareholders,

It gives me great pleasure to welcome you all to the 59th Annual General Meeting of the Shareholders of the Company. The Board's Report and the Audited Financial Statements of the Company for the year ended 31st March 2016 have been with you for some time and with your permission, I shall take them as read.

**Economic Environment**

During the year, the broader global economic and political conditions were turbulent. The global economic growth declined to 3.1 per cent in 2015 as against 3.4 per cent in 2014. According to the International Monetary Fund (IMF), the global growth is projected to remain modest at 3.2 per cent in 2016 and may touch 3.5 per cent in 2017. Emerging economies and developing economies are expected to contribute for a significant share of global growth.

India's stellar economic performance of 7.6 per cent of GDP growth stands out against the backdrop of the slow-growth world. India continues to consolidate the gains achieved in restoring macro-economic stability. The growth was largely due to the accelerated growth in Industrial production and high growth in the services sector. Agricultural output grew by a meag re 1.2 per cent which was an improvement over output contraction experienced in the previous year. For the quarter ended April - June 2016, the Gross Domestic Product (GDP) grew at 7.1 per cent. However, the Finance Ministry is optimistic of close to 8 per cent growth this fiscal, with the good monsoon and seventh pay commission award.

**Agricultural Sector**

India is likely to produce 252.23 million tonnes (MT) of food grains during 2015-16, 4.5 per cent lower than the target set by the Central Government. However, with bountiful rains, an ambitious target of 270.10 million tonnes of food grains output has been set.

Central Government has further predicted that the agricultural growth will be at 6 per cent this year. The robust growth in agriculture can add up to one per cent to the overall economic growth. Wide-spread monsoon rains have boosted the planting of key Kharif crops, such as rice, pulses and oil seeds, raising the prospects of good harvest. This is expected to ease food inflation, lift farm income and boost consumption, aiding overall economic growth.

**Industrial Sector**

The Index for Industrial Production grew by 2.1 per cent led by robust growth in electricity and mining sector. The manufacturing sector grew only by 0.9 per cent.

The Consumer Price Index based inflation increased to 6.07 per cent in July 2016 against 5.77 per cent a month ago, led by higher food prices.

**Automobile Industry**

The automobile sector's performance has a direct bearing on the operations and profitability of NBFCs, like ours. During 2015-16, the automobile sector showed a decent growth with some segments posting a negative growth. The commercial vehicles production showed a growth of 12.10 per cent in 2015-16 as against a negative growth of 0.28 per cent in 2014-15. During 2015-16, the production of Medium and Heavy Commercial Vehicles (M&HCVs) was 3.41 lakh units as against 2.69 lakh units, recording a growth of 27.04 per cent. The production of Light Commercial Vehicles (LCVs) increased to 4.42 lakh units as against 4.30 lakh units, registering a growth of 2.77 per cent.

The total sales of Commercial Vehicles registered a growth of 11.51 per cent during 2015-16 as against a decline of 8.40 per cent in 2014-15. The overall Commercial Vehicles segment posted a growth of 9.65 per cent in April-July 2016 as compared to the same period last year. Medium & Heavy Commercial Vehicles (M&HCVs) registered a growth of 8.51 per cent and the Light Commercial Vehicles (LCVs) grew by 10.50 per cent during April-July 2016 as against that in the same period during last year.

**Working results of the Company**

I am pleased to inform you that the working results of your Company continue to be better. For the financial year 2015-16, the hire purchase disbursements have increased to ₹ **525.62** crore as against ₹ 502.66 crore in the previous year. The total income has increased to ₹ **172.07** crore as against ₹ 150.62 crore in the previous year. The income from Hire Purchase operations have gone up to ₹ **160.30** crore as against ₹ 139.39 crore in the previous year. The profit before

depreciation is ₹ **27.57** crore as against ₹ 23.70 crore of previous year. In 2015-16, after providing depreciation, amortization and other provisions, the profit before tax has gone up to ₹ **24.72** crore as against ₹ 21.29 crore in 2014-15. The profit after tax has declined to ₹ **12.53** crore due to exceptional charges of ₹ **4.32** crore as against ₹ 15.85 crore in 2014-15. After paying an interim dividend on preference shares, the dividend on equity capital has been maintained at 10%. As against the opening surplus in the statement of profit and loss of ₹ 21.12 crore, the balance carried forward is reduced to ₹ **14.73** crore. The reduction is partially attributable to creation of Debenture Redemption Reserve for ₹ **9.60** crore as required under the Companies Act 2013.

### Public Issue of Secured, Redeemable, Non-Convertible Debentures

I am happy to inform that during April-May 2016, the Company successfully made a second Public Issue of Secured, Redeemable, Non-Convertible Debentures (NCDs) of ₹ 1,000 each for an amount up to ₹ 100 crore with an option to retain over-subscription up to ₹ 100 crore, aggregating to ₹ 200 crore. The company received subscription to the extent of ₹ 164.87 crore. The Company made allotment of 16,48,708 NCDs to the eligible applicants on 18th May 2016. The NCDs were listed and admitted to dealings with BSE Limited with effect from 23rd May 2016. The funds raised in the issue are being used for the purpose of business operations of the Company.

### Company's Prospects for 2016-17

Company's prospects for the financial year 2016-17 will show further improvement as the Company has planned to raise resources by issue of NCDs, from banks and other sources. In this backdrop, your company is likely to make higher disbursements during the current year and this will lead to better profitability.

### Government's positive steps for growth

The Central Government's ambitious initiatives like, Make in India, Start-up India, Digital India, Skill India, strong commitment to fiscal targets and the focus on infrastructure creation are expected to brighten the investment horizon. The government has also taken a series of steps to enhance the ease of doing business which has also helped the FDI inflow into the country to improve significantly. The passage of Goods and Services Tax (GST) is expected to lower the taxation levels in the Automobile Sector, which will in turn, enure benefits to NBFCs.

The Society of Indian Automobile Manufacturers (SIAM) expects the Automobile Industry to grow at 6 to 8 per cent for the current year in view of

better outlook for the economy, good monsoon and implementation of Seventh Pay Commission recommendations.

**Acknowledgements**

On behalf of the Board of Directors, I wish to convey my sincere thanks to the shareholders, customers, depositors, bankers, financial institutions, credit rating agencies and employees of the Company.

I pray the Goddess **SAKTHI** to shower Her blessings and guide us in all our endeavours.

24th September 2016 — **M Manickam**
Coimbatore — Chairman

*Note: This does not purport to be a report of the proceedings of the 59th Annual General Meeting of the Company.*